ஆகஸ்ட் - 18

# தமிழ்நாடு செய்திகள்

## முதலமைச்சரின் சிறப்பு விருது

- தமிழ்நாடு அரசானது கோவிட் - 19 நோய்த் தொற்றுக்கு எதிராகப் போராடி வரும் 27 முன்களப் பணியாளர்களுக்கு முதலமைச்சரின் சிறப்பு விருதினை வழங்கி உள்ளது.
- பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த செந்தமிழ்ச் செல்வி, முத்தம்மாள் மற்றும் ஆனந்த வள்ளி ஆகிய 3 பெண்மணிகள் இந்த ஆண்டிற்கான கல்பனா சாவ்லா விருதினைப் பகிர்ந்துள்ளனர்.

| விருதுகள் | வெற்றியாளர்கள் |
|---|---|
| அப்துல் கலாம் விருது | S. செல்வகுமார், ஆனந்தம் இளைஞர் அமைப்பின் நிறுவனர் |
| கோவிட்-19 நோய்த் தொற்றுக்கான சிறப்பு விருது | டாக்டர் சௌமியா சுவாமிநாதன், தலைமை விஞ்ஞானி, உலக சுகாதார நிறுவனம், ஜெனீவா |
| முதலமைச்சரின் சிறந்த செயல்முறைகளுக்கான விருதுகள் | 1) கருவூலம் மற்றும் கணக்குகள் துறை<br>2) சென்னைப் பெருநகர மாநகராட்சி<br>3) வேளாண், தோட்டக்கலை மற்றும் பயிர்கள் பயிரிடுதல் & வேளாண் பொறியியல் துறை<br>4) தமிழ்நாடு மருத்துவச் சேவைகள் கழகத்திற்கு ஊக்குவிப்புச் சான்றிதழ்<br>5) தமிழ்நாடு காவல் துறையின் இணையப் பாதுகாப்புப் பிரிவிற்கு ஊக்குவிப்புச் சான்றிதழ் |
| மாற்றுத் திறனாளிகளின் நலனுக்கான உயரிய சேவைகளுக்கான விருது | |
| சிறந்த நிறுவனம் | காது கேளாதவர்களுக்கான சிஎஸ்ஐ உயர் நிலைப் பள்ளி, சாந்தோம் நெடுஞ்சாலை, மயிலாப்பூர் |
| சிறந்த மருத்துவர் | டாக்டர் G. ஷியாமளா (63), ஜாஹிர் அம்மா பாளையம், சேலம் |
| சிறந்த தனியார் நிறுவன முதலாளி | சக்தி மசாலா தனியார் நிறுவனம் |
| சிறந்த சமூக சேவகர் | சி. சாந்தகுமார் |
| சிறந்த மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி | மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி நிறுவனம், சேலம் |

| பெண்களின் நலன்களை நோக்கிய சிறப்புமிகு சேவைகளுக்கான விருது | |
|---|---|
| சிறந்த சமூக சேவகர் | கோயம்புத்தூரைச் சேர்ந்த கோதண்டவள்ளி என்ற குடும்ப நல ஆலோசகர் |
| சிறந்த நிறுவனம் (பெண்களின் நலனுக்குப் பணியாற்றும்) | ஊரகக் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டு மையம் |
| **சிறப்பாக செயல்படும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலமைச்சர் விருதுகள்** | |
| சிறந்த மாநகராட்சி | வேலூர் |
| சிறந்த நகராட்சி | விழுப்புரம் (முதலாவது), கரூர் (இரண்டாவது), கூத்தநல்லூர் (மூன்றாவது) |
| சிறந்த நகரப் பஞ்சாயத்து | வனவாசி, சேலம் மாவட்டம் (முதலாவது), வீரபாண்டி, தேனி (இரண்டாவது), மதுக்கரை, கோயம்புத்தூர் (மூன்றாவது) |
| முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது | S. அருண்குமார், மதுரை மாவட்டம், R. ராம்குமார், கடலூர் மாவட்டம், S. புவனேஸ்வரி, கடலூர் மாவட்டம் |



## அம்மா கோவிட் - 19 ஹோம் கேர் திட்டம்

- தமிழ்நாடு மாநில அரசானது வீட்டுத் தனிமைப்படுத்துதலில் உள்ள மக்கள் நோய் கண்டறிதல், மருந்துகள் மற்றும் ஆலோசக வசதிகள் என அனைத்தையும் பெறும் வகையில் அம்மா கோவிட் - 19 ஹோம் கேர் என்ற திட்டத்தை அறிமுகப் படுத்தி உள்ளது. இவர்கள் மருத்துவமனைகளில் இருந்தாலும் இந்த வசதியினைப் பெறலாம்.

- இந்த நல உதவித் தொகுப்பானது ரூ.2500 செலவு என்ற அளவில் 14 நாட்கள் கால அளவிற்கு வழங்கப் படுகின்றது.

# தேசியச் செய்திகள்

## தேசிய டிஜிட்டல் சுகாதாரத் திட்டம்

- பிரதமர் மோடி அவர்கள் 74வது சுதந்திர தினத்தன்று நிகழ்த்திய தனது உரையின் போது தேசிய டிஜிட்டல் சுகாதாரத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு இந்தியரும் ஒரு சுகாதார அடையாள அட்டையினைப் பெற உள்ளனர்.
- இந்த அடையாள அட்டையானது அந்த நபரின் முந்தைய மருத்துவ நிலைமை, சிகிச்சை, நோய் கண்டறிதல் உள்ளிட்ட அனைத்து விதமான தகவல்களையும் கொண்டிருக்கும்.
- இந்தத் திட்டமானது முழுவதும் தொழில்நுட்ப அடிப்படையிலானதாகும்.
- இந்தத் திட்டமானது இந்தியாவில் சுகாதார நலத்தின் செயல்திறன், செயலாக்கம் மற்றும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இது பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா அல்லது ஆயுஷ்மான் பாரத் என்பதின் கீழ் செயல்படவுள்ளது.





## நீண்ட காலமாகப் பணியாற்றும் காங்கிரஸ் கட்சி அல்லாத பிரதமர்

- நாட்டில் நீண்ட காலமாக பிரதமராகப் பணியாற்றும் காங்கிரஸ் கட்சியைச் சேராத

ஒரு ஆளுமை நரேந்திர மோடி ஆவார் (2014 ஆம் ஆண்டு மே 26 ஆம் தேதியிலிருந்து ஆகஸ்டு 13 ஆம் தேதி வரை).

- மேலும் இவர் 18 ஆண்டுகளாக ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் தலைவராக உள்ளார். அரசாங்கத்தின் தலைவரால் வகித்து வரும் ஒரு நீண்ட பதவிக் காலம் இதுவாகும்.
- இது 2014 ஆம் ஆண்டில் இந்தியாவின் பிரதமராகப் பதவி ஏற்பதற்கு முன்பு குஜராத்தின் முதல்வராகப் பதவி வகித்ததையும் (2001 ஆம் ஆண்டு அக்டோபர் 7 முதல் 2014 ஆம் ஆண்டு மே 22 வரை) உள்ளடக்கியுள்ளது.
- இவர் முதலமைச்சராகவும் இந்தியாவின் பிரமராகவும் 18 ஆண்டுகள் 306 நாட்களை நிறைவு செய்துள்ளார்.
- இதற்கு முன்பு, இந்தியாவின் முதலாவது பிரதமரான நேரு இந்தியாவின் பிரதமராக 16 ஆண்டுகள் 286 நாட்கள் இருந்தார்.
- நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் தலைவராக மூன்றாவது மிக நீண்ட பதவிக் காலத்தைக் கொண்டவர் இந்திரா காந்தி ஆவார். இவர் 15 ஆண்டுகள் 350 நாட்கள் இந்தியாவின் பிரதமராகப் பணியாற்றினார்.
- காங்கிரசைச் சார்ந்த ஜவஹர்லால் நேரு, இந்திரா காந்தி மற்றும் மன்மோகன் சிங் ஆகியோர் இந்த வரிசையில் நீண்ட காலம் பிரதமர் பதவி வகித்த மூன்று நபர்கள் ஆவார்.




# சர்வதேசச் செய்திகள்

## இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒருவர் அமெரிக்கத் துணைக் குடியரசுத் தலைவர் வேட்பாளராக நியமனம்

- அமெரிக்கத் தேர்தலானது 2020 ஆம் ஆண்டில் நடைபெற உள்ளது.
- குடியரசுக் கட்சியைச் சேர்ந்த அமெரிக்க அதிபரான டொனால்டு டிரம்ப் அமெரிக்கத் தேர்தலில் போட்டியிடுவதற்கான மற்றொரு வாய்ப்பினையும் கொண்டுள்ளார். இவர் எதிர் அணியைச் சேர்ந்தவரான ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜோ பிடன் என்பவரை எதிர்த்துப் போட்டியிடவுள்ளார்.
- ஜோ பிடன் என்பவர் ஒபாமா அதிபராக இருந்த போது அமெரிக்காவின் துணை அதிபராகப் பணியாற்றினார்.
- அதிபர் வேட்பாளரான ஜோ பிடன் ஜனநாயகக் கட்சியின் சார்பாக கமலா ஹாரிஸ் என்பவரை துணை அதிபராகத் தேர்ந்தெடுத்துள்ளார்.
- தேசிய அலுவலகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட இருக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முதலாவது பெண் மற்றும் முதலாவது கறுப்பினப் பெண்மணி இவராவார்.

# பொருளாதாரச் செய்திகள்

## உபரி நிதி அரசிற்கு மாற்றம்




- இந்திய ரிசர்வ் வங்கியின் மத்திய வாரியமானது ரூ.57,128 கோடி உபரி நிதி அல்லது ஈவுத் தொகையை 2019-20 ஆம் ஆண்டில் மத்திய அரசிற்கு வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.
- இது கடந்த ஆண்டில் ஒதுக்கப்பட்ட 1.76 இலட்சம் என்பதிலிருந்து குறைந்து 67.5 சதவீதமாக உள்ளது.
- கடந்த ஆண்டில் RBIயின் மத்திய வாரியமானது RBIயின் முன்னாள் ஆளுநரான பிமல் ஜலான் என்பவரின் தலைமையிலான உயர்நிலைக் குழுவின்

பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டது.

- இந்தக் குழுவானது RBIயின் உபரி நிதி இருப்பு மற்றும் அதன் பகுதியை அரசிற்கு அளிப்பது குறித்துப் பரிந்துரைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## வீரதீர செயல் மற்றும் காவல் துறை விருதுகள்

- இந்தியக் குடியரசுத் தலைவர் ஆயுதப் படை வீரர்கள் மற்றும் துணை இராணுவப் படை வீரர்கள் ஆகியோருக்கு 84 விருதுகள் மற்றும் பதக்கங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளார்.
- இந்த விருதுகள் 1 கீர்த்தி சக்ரா, 9 சௌரிய சக்ரா, 5 சேனா ஆணைப் பதக்கங்கள் (வீரதீர செயல்), 60 சேனா பதக்கங்கள் (வீரதீர செயல்), 4 நவோ சேனா விருதுகள் (வீரதீர செயல்), மற்றும் 5 வாயு சேனா விருதுகள் (வீரதீரச் செயல்), ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.
- நாட்டின் இரண்டாவது உயரிய அமைதி வழி வீரதீரச் செயல் விருதான கீர்த்தி சக்ரா விருதானது ஜம்மு காஷ்மீர் காவல்துறையின் தலைமைக் காவலரான அப்துல் ரஷித் கலாஸ் (இறப்பிற்குப் பின்பு) என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- சௌரிய சக்ரா என்பது மூன்றாவது உயரிய அமைதிவழி வீரதீரச் செயல் விருதாகும். அசோக் சக்ரா என்பது உயரிய அமைதிவழி வீரதீரச் செயல் விருதாகும்.
- மொத்தமாக 926 காவல் துறையினருக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.
- வீரதீரச் செயலுக்கான காவல்துறை விருதுகள் 215 காவல் துறையினருக்கு, அவர்களின் வீரதீரச் செயலைப் பாராட்டி வழங்கப்பட்டுள்ளது.
- தகைசால் பணிக்கான குடியரசுத் தலைவரின் காவல் துறை விருதானது 80 காவல் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- சிறப்பான (மெச்சத்தக்க) பணிக்கான காவல்துறை விருதானது 631 காவல் துறையினருக்கு வழங்கப் பட்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★